புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# மௌனம் சுமக்கும் வானம் ஹைக்கூவில் சமுதாயச் சிந்தனைகள்

திருமதி ரா.வசுமதி
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஆதிபராசக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கலவை – 632 506. வேலூர், தமிழ்நாடு.

ஆய்வுச் சுருக்கம்

இருபத்தியொன்றாம் நூற்றாண்டின் இணையற்ற இலக்கியங்களாக விளங்கக் கூடிய ஹைக்கூவில் சமுதாயச் சிந்தனை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றது. இவ்விலக்கியங்களில் நம்மைச் சுற்றியுள்ள சூழலை விவரிக்கும் விதமாக குடும்பத்தின் தொடக்கமும் அக்குடும்பங்கள் கூட்டு மற்றும் தனிக்குடும்பங்களின் செயல்பாடுகளும் அக்குடும்பங்களுக்குள் ஏற்படக்கூடிய சாதி, மத, அரசியல் மனித நேய செயல்பாடுகளையும் அச்சமூகத்தின் கல்வியறிவு, நிலையாமை, வேளாண்மை, குழந்தைத் தொழிலாளர் வறுமை நிலைகளை விவரிக்கும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## முன்னுரை

மனிதன் விலங்குகளைப்போல் தன்னிச்சையாகக் காடுகளிலும் மலைகளிலும் மற்றும் பிற இடங்களிலும் திரிந்து வாழ்ந்தான். அலைந்தும், திரிந்தும் வாழ்ந்துக் கொண்டிருந்த மனிதன் ஒன்றாகக் கூடி வாழ முற்பட்டபோது சமுதாயம் என்ற அமைப்பு தோன்றியது. சமுதாயம் என்பது ஒன்று கூடி வாழும் மக்கள் இனத்தைச் சுட்டுவதாகக் கருதப்படுகிறது.

## சமுதாயம் - பொருள் விளக்கம்

சமுதாயம் என்ற சொல்லிற்குப் பொருள் விளக்கம் கூறும்போது ‘சமுதாயம்’ என்ற சொல் வடமொழி கலந்த தமிழ்ச்சொல். இச்சொல் சமுதாயம் எனப் பிரிக்கலாம். தாயம் என்ற சொல்லின் முன் ‘சமூ’ என்னும் அடைமொழி பெற்று நல்ல கூட்டம் எனப் பொருள்படும். தாயம் என்ற சொல் தனிச்சொல் தாய்வழிக் கூட்டத்தைக் குறிப்பது என்று கூறுவர்.

> “சம் என்ற வடமொழி வேரிலிருந்து தோன்றிய சமூகம், சமுதாயம் ஆகிய இரு சொற்களுமே மக்கள் கூட்டம் என்ற எளிய பொருளுடையனவே.”[1]

என்னும் கருத்தை கு.வே.பாலசுப்பிரமணியன் கூறியுள்ளார்.

## சமுதாயம் - மானிடவியலார் கருத்து

மக்கள் சேர்ந்து வாழும் அமைப்பான சமுதாயத்தைப் பற்றிக் கூறும்போது, “சமயம், பண்பாடு, அறிவியல், அரசியல், நாட்டுப்பற்று முதலியவற்றின் அடிப்படையில் சேர்ந்து செயல்படும் - வாழும் மக்கள் கூட்டத்தினையே சமுதாயம் என அறிஞர்கள் கூறுவர். ஆனால் நெடுங்காலம் ஒன்றாகக் கூடி வாழ்ந்தும், தொழில் புரிந்தும் வரும் மக்கள் கூட்டத்தைச் சமுதாயம்”[2] என மானிடவியலார் கூறுவர்.

“சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திக் கொண்ட ஒரு கூட்டமைப்பாகும்”[3] என்று

சமுதாய மானிடவியல் கூறுகிறது. இவர்களின் கருத்தை பிரதிபலிக்கும் விதமாக கவிஞர் மித்ராவின் சிந்தனையும் உள்ளது என்பதை,

"மலையெங்கும் காளான்கள்
ஆதிவாசிகள்
குடியிருப்புகள்" (மௌ.சு.வா.12)

என்ற கவிதை எடுத்தியம்புகிறது. ஆதிகாலத்தில் மனிதன் எப்படி சமூகமாக வாழ்ந்தான் என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

அறிஞர்களின் கருத்து

இலக்கியங்கள் யாவும் சமுகத்தில் நடந்த அல்லது நடக்கின்ற நிகழ்ச்சிகளைச் சுவைபடக் கூறுவனவாகும். சமுதாயத்தின் ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்த அல்லது நிகழ்கின்ற நிகழ்ச்சிகளைக் காட்டும் ஒரு சமுதாயப் படங்காட்டும் கருவி என்றும் எடுத்துக் கொள்ளலாம். மனிதனையும், சமுதாயத்தையும் அறிய இலக்கியம் நமக்கு உதவுகிறது. காலத்திற்கேற்றவாறு சமுதாயமும், இலக்கியமும் மாற்றம் பெற்றுள்ளன.

"இலக்கியம் சமுதாயத்தையும், சமுதாயம் இலக்கியத்தையும் பாதித்தே வளர்ந்துள்ளன"[4] என்கிறார் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள்.

இலக்கியநோக்கும் பயனும்

தமிழில் தோன்றியுள்ள இலக்கிங்கள் அனைத்தும் அவை தோன்றிய காலத்து மக்களின் வாழ்க்கை நெறிகளை உணர்த்துவனவாகவே அமைந்துள்ளன. அம்மக்களின் சமுதாய அடிப்படையிலேயே இலக்கியங்கள் உருப்பெற்றன. இதனை, "ஒவ்வொரு காலப்பகுதியிலும் நடப்பிலிருக்கின்ற பொருளாதார அரசியற் சமுதாய அமைப்புகளின் பிரதிபலிப்பாகத் தோன்றும் தத்துவக் கோட்பாடுகளுக்கு ஏற்பவே இலக்கியம் பற்றிய சிந்தனைகளும் அமைகின்றன"[5] என்னும் க. கைலாசபதியின் கூற்று அரண் செய்கிறது.

இலக்கியமும் சமுதாயமும்

இலக்கியங்களின் வழி சமுதாயச் செய்திகள் பலவற்றை அறிய முடிகின்றது. சமுதாயத்தின் உணர்வுகளோடும், உண்மைகளோடும் இலக்கியங்கள் பிறந்திருக்கின்றன. இலக்கியங்கள் சமுதாய உறுப்பினரான மனிதனால் படைக்கப்படுபவை என்பதால் சமுதாயத்தின் சாயல் இல்லாமல் போகாது எனலாம்.

"கற்பனை ஊற்றாகத் தோன்றி உணர்ச்சி வெள்ளமாகப் பெருகி, கருத்துக் கடலாகக் காணும் இலக்கியம், சமுதாய நிலத்தில் விளையும் பயிர்"[6] என்று எஸ். வையாபுரிபிள்ளை கூறுவார்.

குடும்பம்

குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம் பெருங்குழு, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது. ஆதலின், குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. வாழுங்காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் இந்த அளவுக்கு மனிதனைச் சமூகவயப்படுத்தும் பணியை செய்ததில்லை.

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை, திருமணமே. குடும்பம் திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன. நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல இன்று நாம் வழங்கும் திருமணம், குடும்பம் ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் இடம் பெறவில்லை.

"குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில் தான் (1029) பயின்று வருகிறது."[7]

கூட்டுக் குடும்பம் தனிக்குடும்பம்

கூட்டுக்குடும்பம் என்பது ஒரே இரத்த சம்பந்தம் உடையவர்கள் ஒன்றாக சேர்ந்து வாழ்வதைக் குறிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட தம்பதியர்களை உள்ளடக்கியது கூட்டுக் குடும்பமாகும். இதனை, "ஒரே மரபு வழி சார்ந்த இரத்த உறவுடைய இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ ஒரே வீட்டில் ஒரே தலைமையின் கீழ் தங்கள் மனைவியர்களுடனும், குழந்தைகளுடனும் கூடி வாழ்தலையே கூட்டுக் குடும்பம்"[8] என்று ஆறு. இராமநாதன் கூறுகிறார்.

தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் என்றும் இரண்டு குடும்ப அமைப்புகளில் கூட்டுக் குடும்பம் அமைப்பே காலத்தால் முற்பட்டதாகும் என்பதை உணர்த்தும் வகையில் கவிஞர்,

*“கூட்டுக் குடும்ப வாழ்க்கையைச்*
*சொல்லித்தரும்*
*கரையான்கள்’’ (மௌ.சு.வா., ப.76)*

*என்கிறார்.*

*சமூகத்தில் மிகச் சிறந்த அமைப்பாக விளங்குவது குடும்பமாகும். அக்குடும்பம் சமூக அமைப்பில் உயிர்நாடியாகத் திகழ்கிறது. பல குடும்பங்களின் இணைப்பே சமூகமாகும். இன்றைய சூழலில் கூட்டுக் குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் விதமாக கவிஞர்,*

*“உயரத்தில் விழுதுகள்*
*பார்த்து ரசிக்கும்*
*ஆலமரம்’’ (மௌ.சு.வா., ப.101)*

*என்கிறார். இத்தகு சிறப்பு வாய்ந்த கூட்டுக் குடும்பத்தின் சிதைவே தனிக் குடும்பத் தோற்றத்திற்கு மூலவித்தாகும். கூட்டுக் குடும்பத்தின் சிதைவாக தனிக் குடும்பம் விளங்குகிறது என்பதை,*

*“தனித்த குருவி*
*அழுது புலம்பியது*
*உதிர்ந்தன பூக்கள்’’ (மௌ.சு.வா., ப.117)*

*என்ற கவிதையின் வழியே உணர்த்துகிறார்.*

*சாதி*

*இந்தியச் சமுதாயத்தைக் குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயத்தைச் சாதியெனும் பெருநோய் அரித்து வருவதை ஒழிக்க வள்ளுவர் முதல் பாரதிதாசன் வரை முயன்றும் எதிர்பார்த்த நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. பெரியார் சாதியொழிப்பினைப் பற்றி பலகாலம் பேசியும், எழுதியும் வந்தார். எனினும் போதிய பலனைப் பெறத் தவறிவிட்டோம். மாறாக இன்றைய நிலையில் சாதியின் பெயரால் பல சங்கங்கள் தோன்றியுள்ளன. இவையனைத்தும் தத்தம் சாதியின் போலிப் பெருமைகளைப் பறைசாற்றிக் கொண்டுள்ள காரணத்தினால், தமிழ்ச் சமுதாயத்தில் தேவையற்ற பல பிளவுகளும், பூசல்களும் தோன்றி ஒற்றுமை குன்றிஞூ வேற்றுமை பெருகிஞூ சண்டைகளும், கலகங்களும் ஏற்பட்டு சாதீ எனும் தீ சமுதாயத்தை அழித்துச் செல்கிறது.*

*“சாதி என்ற சொல், வடமொழியில், ஜாதி என்பதற்கு சமம், பிறப்பு என்பது பொருள். இங்கே ஒருவருடைய வகுப்பு அவருடைய பிறப்பைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. அதனைக் குறிக்க சாதி என்ற சொல் உருவாகியிருக்கலாம்’’[9] என ஆறு. இராமநாதன் கூறுகிறார்.*

*சாதிக் கலவரம்*

*சாதிவெறி தலைவிரித்தாடும் இன்றைய காலக்கட்டத்தில் மனிதன் எங்கும் தனித்து செல்ல முடியாது. ஏனென்றால் அனைவரும் சாதி என்ற தளையால் கட்டுண்டுள்ளனர் அத்தளை உடையும் நேரத்தில் (காலத்தில்) பல்வேறு பிரச்சனைகள் எழுகின்றன. அதனால்தான் மனிதன் அதில் சிக்கிச் சிதைக்கப்படுகின்றான் என்பதினை கவிஞர்,*

*“ஊருக்கு போன தந்தை*
*திரும்பி வரவில்லை*
*சாதிக் கலவரம்’’ (மௌ.சு.வா., ப.93)*

*என்கிறார்.*

*சாதிவெறி தலைவிரித்தாடும் இன்றைய காலக்கட்டத்தில் மனிதன் எங்கும் தனித்து செல்ல முடியாது. ஏனென்றால் அனைவரும் சாதி என்ற தளையால் கட்டுண்டுள்ளனர் அத்தளை உடையும் நேரத்தில் (காலத்தில்) பல்வேறு பிரச்சனைகள் எழுகின்றன. அதனால்தான் மனிதன் அதில் சிக்கிச் சிதைக்கப்படுகின்றான் என்பதினை கவிஞர்,*

*“ஊருக்கு போன தந்தை*
*திரும்பி வரவில்லை*
*சாதிக் கலவரம்’’ (மௌ.சு.வா., ப.93)*

*என்கிறார்.*

*மதம்*

*உலகின் ஆரம்பம் மதம். மதம் என்றால் சம்மதம் என்று பொருள், உலகம் தோன்றிய காலம் முதல், மக்கள் தங்களுடைய நல்வாழ்வுக்காக ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அவரையே தங்கள் உலக வாழ்க்கைக்கு நாயகராகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டு அவருடைய வழியில் பயணித்து வருகின்றனர். அவ்வகையில் கவிஞர் மித்ரா அவர்கள் எம்மதமும் சம்மதம் என்ற வாக்கியத்திற்கிணங்க செயல்படுபவராக விளங்குகின்றார் என்பதினை உணர்த்தும் விதமாக அவர் கவிதைகள் அமைந்துள்ளன. "மதம் என்பது மக்களின் நலத்திற்காகவும், சமுதாய நலத்திற்காகவும், உலக மேம்பாட்டிற்காகவும் தோன்றிய ஒரு வகை பண்பாட்டு அமைப்பாகும்"10 என்று வைத்தியலிங்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.*

*சமயம் என்பது அனைத்து மதங்களுக்கும் சமம் என பொருள் கொண்டாலும், இன்றைய நவீன உலகில் மதங்கள் அனைவர்க்கும் சமமாக இருக்கும் ஒரே இடம் சுடுகாடு என்பதை,*

"சாதிகளை மறந்து
இளைப்பாறும் உடல்கள்
சுடுகாட்டில்" *(மௌ.சு.வா., ப.114)*

*புத்த மதம்*

*உலகத்தில் அறம் குன்றி மறம் வளர்ந்து மக்கள் துன்பமடையும் போதெல்லாம் மனித உருவில் மனிதர்கள் தோன்றி அறவழியைப் புகட்டி மக்களை நல்வழிபடுத்துவார்கள் என்ற எண்ணம் கொண்டு பௌத்த மதம் பாரதக் கண்டத்தில் தோன்றி வளர்ச்சிப் பெற்று பின்னர், இன்று பல நாடுகளில் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. அம்மதத்தின் கொள்கைகளான கொல்லாமை, தருமம், கருணை, துறவு முதலியவை உலக மக்களால் பின்பற்றப்படுகின்றன என்பதை,*

"பிறந்தகத்தில் வாழ
பிறநாட்டில் செழிக்கிறது
புத்தர் கொள்கை" *(மௌ.சு.வா., ப.95)*

*என்று கூறுகிறார்.*

*இஸ்லாம் மதம்*

*எல்லா புகழும் இறைவன் ஒருவனுக்கே என்ற பொன்மொழியின் பிறப்பிடமாய், கருணையின் உறைவிடமாய், அகிலத்திற்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட தலைவராம், இஸ்லாம் மதத்தின் தலைமகனாம், நல்லொழுக்கத்தின் நன்மகனாம், உலகம் போற்றும் உத்தமனாம் நபிகள் அவர்களின் இறையருளால் உலக மக்களை நல்வழிபடுத்த தோன்றிய இறைநூலாம் திருக்குரான் பற்றி குறிப்பிடுகின்றபோது,*

"மானுடத்தின் பரிசு
சாதனைக்குச் சான்று
முகமதுவின் குர்ரான்" *(மௌ.சு.வா., ப.95)*

*என்று கூறுகிறார்.*

*கிறித்துவ மதம்*

*அன்பென்ற மழையிலே அகிலங்கள் நனையவே அதிரூபனாய் தோன்றி உலக உயிர்களிடத்து அன்புகாட்டி அனைவரையும் இரட்சிக்கும் இறைவனாக, சகிப்புத் தன்மையின் உறைவிடமாக, போர்க்கொண்ட பூமியை பூக்காடாய் மாற்ற கல்வாரி மலையிலே உலக அழுக்குகளை அகற்ற கோடை மழையாக இயேசுபிரான் அவதரித்ததை,*

"அழுக்கு பூமியைக்
கழுவித் தூய்மை செய்தது
கோடை மழை"*(மௌ.சு.வா., ப.110)*

*என்று கூறியுள்ளார்.*

*மேற்கூறிய இக்கவிதைகளின் கருத்தாழத்தை ஆராய்ந்தால் கவிஞர் மித்ராவின் சமயப் பொதுவுடைமை புலனாகும். எம்மதமுமம் சம்மதம் என்ற நோக்குடையவர் கவிஞர் மித்ரா என்பதை இதன் மூலம் அறியலாம்.*

*அரசியல் நிலை*

*அரசியல் என்பது மக்கள் குழுக்களில் முடிவெடுக்கும் முறையைக் குறிக்கும் சொல். பொதுவாக அரசமைப்புகளின் செயல்பாட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டாலும், அரசியல் உண்மையில் அலுவகம், கல்வி, மற்றும் சமய நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து மனித குழு உரையாடல்களிலும் காணப்படுகிறது. இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள். கிராமங்களின் தொழில் விவசாயம். அந்த விவசாயத்திற்கு அடுத்தபடியாக அரசியல்தான் மக்களை வேலை செய்ய விடாமல் தன்பக்கம் விழுந்துகிடக்க வைத்துள்ளது எனலாம்.*

*“இந்தியாவில் விவசாயத்துக்கு அடுத்தபடி அரசியலில்தான் அதிகம் பேர் ஈடுபடுகிறார்கள். பருத்தி நெசவின் பாதி உற்பத்தியைக் கட்சிகளின் கொடிக் கம்பங்களே கவர்ந்து செல்கின்றன. இந்தக் கொடிக் கம்பங்களுக்குக் கீழே கோவணதாரிகளாய் இந்நாட்டு இளைஞர்கள்”[11] என்கிறார் கௌதமன் அவர்கள்.*

*“இவ்வுலகமே அரசியலைச் சுற்றி சுழன்று வருகிறது. ஒட்டுமொத்த மனித இனமும் ஒருவிதமான அரசியல் கூட்டமைவுக்குள் உள்ளிழுக்கப்பட்டு அதற்கு உள்ளேயே மனிதர்களுக்கிடையேயான செயல்பாடுகளும் மோதல்களும் நிகழ்ந்த வருகின்றன”[12] என்று கூறுகின்றார். இவர் கருத்திற்கு வலிமை சேர்க்கும் விதமாக அரசியல் கட்சிகள் தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்த தொண்டர்கள் வாயிலாக பூசல்களையும், மோதல்களையும் நிகழ்த்துவதனை,*

*“பேசிப் பேசியே*
*பெருஞ்சண்டை மூண்டது*
*பறவைகளுக்கிடையே”* *(மௌ.சு.வா., ப.105)*

*என மித்ரா அவர்கள் கூறுகிறார்.*

*கட்சிகள்*

*அரசியல் கட்சிகளுக்கு அளவில்லை கழனியில் பரவும் களை போல் சாதிக்கு ஒரு கட்சி வீதம் தினந்தினம் உருவாகிக் கொண்டுள்ளது. அக்கட்சிகள் குறிக்கோளேதுமின்றி பதவி ஆசையில் சுயநலமாய் செயல்படுவதை பற்றி கவிஞர் மித்ரா அவர்கள்,*

*“நாற்காலி கனவுகள்*
*உருவாகும் நனவில்*
*தோன்றும் புதுக்கட்சிகள்”* *(மௌ.சு.வா., ப.42)*

*எனக் குறிப்பிடுகிறார்.*

*தேர்தல்*

*அரசியல் என்ற ஆடுகளத்தில் தேர்தல் என்ற சூதாட்டம் இன்று பெரும் வேதனையைத் தருவதாக அமைந்துள்ளது என்பதை உணர்த்த,*

*“தேர்தல் நாள்*
*விரலில் கருப்புமை*
*துக்கத்தின் துவக்கம்”* *(மௌ.சு.வா., ப.58)*

*என்று மக்களின் நிலையைப் பற்றி கவிஞர் கூறுகிறார். இதே கருத்தை வலியுறுத்தும் விதமாக சுவாதீ அவர்கள்,*

*“ஓட்டுப் போட்டே*
*உரிமைகள் இழப்பான்*
*இந்தியன்”[13]*

*என்று இந்திய மக்களின் நிலையை கூறுகிறார்.*

*அரசியல் குற்றங்கள்*

*மக்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாங்கமே இன்று சமூக குற்றங்களின் பிறப்பிடமாக திகழ்கின்றது. எங்கும் ஊழல், எதிலும் ஊழல். நிலமடந்தையின் மடியில் தோன்றிய மணலில் இருந்து விண்வெளிக்குச் செலுத்தும் செயற்கைக் கோள் வரை அரசியல் குற்றங்கள் நிகழ்கின்றன. இதனை கவிஞர்,*

*“நடந்த பாலம்*

இடிந்து விழுந்தது
மணல் திருட்டு”          (மொள.சு.வா., ப.13)

என்று கவிதையில் குறிப்பிடுகின்றார்.

### கல்வி நிலை

கல்வி என்பது அறிவு, நல்லொழுக்கம், நுட்பத்தகைமை ஆகியவற்றைக் கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும். இது திறன்கள், தொழில்கள், உயிர்த் தொழில்கள் என்பவற்றோடு மனம், நெறிமுறை, அழகியல் என்பனவற்றை சார்ந்தே தன் வளர்ச்சியைக் கொண்டுள்ளது.

அறிவு என்பது மனித மூளைக்குள் இருக்கிறது. அதனை வெளியே கொண்டு வருவது கல்வியே. கல்வி என்ற சொல்லின் மூலச்சொல் ஷகல்| என்பதாகும். இதன் பொருள் ஷதோண்டுதல்| அதாவது, கல்வி மனிதனுக்குள் இருக்கும் அறிவைத் தோண்டி வெளியே கொண்டு வருகிறது என்பதை,

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு”[14]

என வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

“வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமான செல்வங்களுள் முதலிடம் பெறுவது கல்வி. கல்வியை முழுவதும் கற்று முடித்தாகிவிட்டதென்று யாரும் சொல்ல முடியாது. கல்விக்கு ஆதிதேவதையான சரஸ்வதியே இன்னும் படித்துக் கொண்டிருக்கின்றார”[15] என்று எஸ். நடராஜன் அவர்கள் குறிப்பிடுகிறார். இத்தகு சிறப்பு மிக்க கல்வி இன்று வியாபாரமாகி விட்டதை கவிஞர்,

“தரிசு நிலங்களில்
அமோக விளைச்சல்
கல்விக் கூடங்கள்”          (மௌ.சு.வா., ப.119)

என தன் கவிதை வழியே இன்றைய கல்விக் கூடங்கள் அதிக கட்டணங்கள் வசூலிப்பதை அமோக விளைச்சலென்று குறிப்பிடுகிறார்.

### நிலையாமை

மனித வாழ்வு நிலையற்றது இவ்வுண்மையை அறிந்து நிலையற்றதை விடுத்து நிலையானதை நாட வேண்டும் என்பதை,

“நாற்றப் பண்ட நான்முடித்து ஒன்பது
பீற்றல் துண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய கடலைத் திருடன்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்
ஓயா நோய்க்கிடம் ஓடும் மரக்கலம்”[16]

இரத்தமும், மலமும் கலந்த நாற்றம் கொண்ட உடலானது. ஒன்பது ஓட்டைகளும் அடைபட்டவுடன், தன் பெயரை நீக்கி பிணம் எனப் பெயரிடப் படுகின்றது என பட்டினத்தார் கூறுகிறார். இதனையே, ஷபெயரினை நீக்கி பிணம் என்று பெயரிட்டு| என்று திருமூலர் கூறுகிறார். “காலத்திற்கு சொந்தமில்லை
மலர்கள்
மனிதர்கள்”          (மௌ.சு.வா., ப.24)

வாழ்க்கை என்பது ஒரு வழிப் பயணம். அப்பயணம் முடிந்தவுடன் மனித வாழ்வும் முடிந்துவிடுகின்றது. இதனை நிலையாமை என்ற கருத்தில் கூறுகிறார் கவிஞர். மேலும் இன்று இருப்பவர் நாளை இல்லை. நாளை இருப்பவர் நாளை மறுநாள் இல்லை என்ற உண்மையை,

“பூகம்ப நிகழ்வு
புரிய வைத்தது
வாழ்வின் இரகசியம்”          (மௌ.சு.வா., ப.34)

என வாழ்க்கையின் நிலையின்மையை உலகிற்கு உணர்த்துகிறார்.

### மனிதநேயம்

உலகில் உள்ள எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி, துன்பத்தை போக்குகின்ற உன்னதமான வாழ்க்கை நெறியே மனிதநேயம் என்பதை,

"ஈரநெஞ்சில் என்றும்
தழைக்கும்
மனிதநேயம்" (மௌ.சு.வா., ப.28)

என்று நவில்கின்றார்.

"மனித இனத்தின் துன்பங்களையும், துயரங்களையும் குறைத்து இன்பங்களை அதிகரிப்பதே மனித இன நலக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவமாகும்"[17] என வாழ்வியற்களஞ்சியம் கூறுகின்றது. இதனை உணர்த்தும் விதமாக,

"பூகம்ப முடிவில்
சமத்துவம் பேசின
சாதிமத பேதங்கள்" (மௌ.சு.வா., ப.12)

என்ற கவிதை வழியுரைக்கிறார்.

வறுமை

வறுமையை முற்றிலும் வறுமை (Absolute Poverty) tWik என்றும், ஒப்பீட்டு வறுமை (Relative Poverty) என்றும் இருவகைப்படுத்தலாம். முற்றிலும் வறுமை என்பது ஒரு குடும்பத்தின் வருமானம் அக்குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத அளவில் மிகக் குறைவாக இருப்பதாகும். மிகக் குறைந்த அளவு வாழ்க்கைத் தரத்திற்கும் கீழான நிலையில் உள்ளவர்களை இது குறிக்கும். ஒப்பீட்டு வறுமை என்பது இரண்டு பிரிவினரின் வாழ்க்கைத் தரத்திற்கு இடையே உள்ள ஏற்றத் தாழ்வினைக் குறிப்பதாகும். இந்தியா போன்ற நாடுகளில் இவ்விரண்டு வகை வறுமையும் காணப்படுகிறது.

"வருவாயில் கடைப்பட்ட குடும்பத்தினரை வறியவர்"[18]

எனக் கூறியுள்ளார் ப்ருயெரே என்ற அறிஞர். சமுதாயத்தில் வறுமை என்பது மக்கள் அனைவரையும் பாதிக்கும் ஒன்றாகும். ஒவ்வொரு மனிதனும் வறுமையால் வாடுவதையும், உயிர்வாழ அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவு ஏழையின் வீட்டில் எட்டாக் கனியாக உள்ளதை,

"நிலாச்சோறு மறுத்து
நிஜச் சோற்றுக்கு அடம்பிடிக்கும்
ஏழைக் குழந்தை" (மௌ.சு.வா., ப.10)

என கவிஞர் மித்ரா எடுத்துரைக்கிறார்.

குழந்தைத் தொழிலாளர்

எந்த நாட்டிலும் இல்லாத அளவு குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பது இந்தியாவில் தான். வறுமை, சமூக ஏற்றத்தாழ்வு, மேல்தட்டு நிலையினரின் சுரண்டல், நியாயமற்ற அரசியல் போக்கு, இலஞ்சம் என பல காரணங்களால் குழந்தைத் தொழிலாளர்கள் வர்க்கம் உருவாயிற்று. சமூக அவல நிலையில் இதுவும் ஒன்றாக உள்ளது என்பதை,

"பருத்தச் செடிகள்
உண்ணும் சந்தை
பாவம் சவலைச் செடிகள்" (மௌ.சு.வா., ப.104)

என்று குழந்தைத் தொழிலாளர்களை பற்றி குறிப்பிடுகிறார்.

வறுமையின் காரணமாக பள்ளிச் செல்ல வேண்டிய சிறுவர்கள் தங்களின் எதிர்கால சுமைகளையும் இன்றே சுமக்கின்றனர் என்பதை,

"எதிர்காலச் சுமைகளை
இன்றே சுமக்கப் பழகும்
பள்ளிச் சிறுவன்" (மௌ.சு.வா., ப.100)

என எடுத்துரைக்கிறார்.

முடிவுரை

சமூகம் என்பது மனித இனத்தை சுற்றி காணப்படுகின்ற இயற்கை மற்றும் செயற்கை பொருட்களின் தொகுப்பாகும். இவற்றுடன் மனிதன் எவ்வாறு இணைந்து வாழப் பழகினான், அதன் காரணமாக சமூக அமைப்பு எவ்வாறு உருவானது என்பதை மட்டுமல்லாமல் சமூகம் என்ற

சொல்லின் பொருள் விளக்கமும் அகராதிகள் மற்றும் அறிஞர்களின் கருத்துக்கள் வழியே தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. சமூகம் இலக்கியத்துடன் எவ்வாறு தொடர்புடையன என்றுரைப்பதோடு மட்டுமின்றி சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பத்தின் வகைகளைக் கூறி அதன் முக்கியத்துவத்தையும், குடும்பங்களின் பெருக்கம் காரணமாகவே பல்வேறு சமூகங்கள் சாதியை அடிப்படையாக கொண்டு பிரிக்கப்பட்டன. சாதிகள் பெருகின. அதனால் கலவரங்கள் ஏற்பட்டதையும் கூறியதோடு மட்டுமின்றி சாதியை சாடும் கவிஞர்களின் கவிதைகளும் கருத்துக்களும் எடுத்தாளப் பட்டுள்ளன. கவிஞர் மித்ரா அவர்கள் ஒரு சமத்துவவாதி என்பது அவர் கவிதைகளின் வழியே அறியமுடிகிறது. இவரின் மதம் தொடர்பான கவிதைகள் மக்களுக்கு நற்கருத்துக்களை உணர்த்துவதாகவே அமைந்துள்ளன.

சான்றெண் விளக்கம்

1. கு.வே. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ஆராய்ச்சி முன்னுரை, ப.1
2. ஒப்பில்லா மதிவாணன், சமூகமும் சமுதாயமும், ப.354
3. வி. கருப்பையன், சமுதாய மானிடவியல் வாழ்வியற் களஞ்சியம். தொகுதி-8, ப.472
4. அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, ப.58
5. க. கைலாசபதி, இலக்கியமும் திறனாய்வும், முன்னுரை, ப.எ
6. எஸ். வையாபுரிபிள்ளை, இலக்கிய சிந்தனைகள், ப.76
7. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.58
8. மேலது, ப.30
9. மேல்நிலை இரண்டாமாண்டு தமிழ்ப் பாடநூல், ப.48
10. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.24
11. சே. வைத்தியலிங்கன், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, ப.4
12. கௌதமன், எழுபது கோடியில் இவனும் ஒருவன், ப.69
13. நா. வேணுகோபாலன், பொருளாதாரம், ப.15
14. சுவாதீ, காற்று சொன்ன ஹைக்கூ, ப.51
15. திருவள்ளுவர், திருக்குறள், கு.எ.396
16. பட்டினத்தார் பாடல்கள், பக்.11-15
17. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி 12, ப.591
18. அமிர்தலிங்கம், தமிழ் கவிதைகளில் வறுமைப்புனைவு, ப.18

பார்வை நூல்கள்


1. குரூஸ், ஜோ.டி, ஆழிசூழ் உலகு, தமிழின் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 2004.
2. பாஸ்கரன், ஆர், அரசியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. மறுபதிப்பு 1971.
3. ஒப்பில்லா மதிவாணன், சமூகமும் ; சமுதாயமும், 20வது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி - 2, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், மு.ப. 1988.
4. பரிமேலழகர் உரை ஆசிரியர், திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு-2003.
5. கருப்பையன், வி., சமுதாய மானிடவியல், வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-8, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். மு.ப. – 1991
6. ஞானசம்பந்தன், அ.ச., இலக்கியக் கலை, கழக வெளியீடு, சென்னை - 1. ஐ.ப. 1973.
7. பாரதியார், பாரதியார் கவிதைகள், குமரன் பதிப்பகம், சென்னை. பதிப்பு – 2013
8. கைலாசபதி, க., இலக்கியமும் திறனாய்வும், சக்கரம் புக்ஸ், சென்னை. மு.ப. 1990
9. பரமசிவானந்தம், அ.மு., சமுதாயமும் பண்பாடும், தமிழ் கலைப் பதிப்பகம், சென்னை. இ.ப. 1972.
10. தர்மலிங்கம், சமுதாயம் வாழ்வியற் களஞ்சியம், தொகுதி -8, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
11. பன்னீர்செல்வம், சு.கு., - குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் ஓர் ஆய்வு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப.2009.
12. அரசியல் அறிவியல், தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம், தொகுதி - 2 ப. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், மு.ப. 2018.


********* ********* ********** ********* ********* ********** ********** **********